# பாடம் ஒன்று



# இயேசு கிறிஸ்து யார்?

மேலே உங்கள் பெயரை எழுதி கொடுக்கப்பட்ட காலி இடங்களில் வேதாகம வசன குறிப்புகளை நிரப்பவும்.

## அவரைக் குறித்து மற்றவர்கள் சொன்னது

நீங்கள் ஒரு விமானத்தில் வேறு ஒரு நாட்டுக்குப் போவதாக மட்டுமல்ல, முந்திய காலத்திற்கே செல்வதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அவ்வாறு பயணம் செய்து சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாக இருந்த இஸ்ரவேல் நாட்டில் தரையிறங்குவதாகக் கொள்ளுங்கள். நீங்கள் விமானத்தை விட்டு வெளியே வரும் போது அங்கே ஒவ்வொருவரும் நாசரேத் என்னும் நகரத்திலிருந்து வந்த இயேசு என்னும் பெயர் கொண்ட மனிதனைப் பற்றிப் பேசுவதைக் காண்கிறீர்கள். சிலர் அவரை விரும்புகிறார்கள், சிலர் அவரைப் பகைக்கிறார்கள், சிலர் அவர் பிரச்சனைக்குறியவரென்றும் ஏமாற்றுக்காரரென்றும்[1] கூற மற்றவர்களோ அவரை கடவுளின் சிறப்பான தூதர் என்றும் தீர்க்கதரிசியென்றும், கூறுகிறார்கள். இன்னும் சிலர் அவர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசம் கொள்கிறார்கள்.



ஒரு காலக் கடிகாரத்தின் பின்னுக்குப் போதல்

இப்படி அவர்கள் பேசுவதைக் கேட்கும் பொழுது சிலர் தங்கள் மனதில் அவர் மீது உறுதியான பகை உணர்ச்சியை எழுப்புவதையும் அதே நேரத்தில் சிலர் அவரை நேசித்து வணங்குவதையும் கண்டு உண்மையாகவே உங்களுக்கு ஆச்சர்யமாகயிருக்கும். நீங்கள் அவரைக் காணும் பொழுது அவர் எவ்வளவு அன்புள்ளவரென்றும், நீதியுள்ளவரென்றும் தைரியமுள்ளவரென்றும் கண்டு கொள்வது நிச்சயம்.

இந்த பாடத்தில் நாம் இயேசுவைப் பற்றி மக்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றும் இயேசு தன்னைப் பற்றி என்ன கூறுகிறார் என்றும் கவனிப்போம்.

### மக்கள் கூட்டத்தின் அறிய ஆர்வமுள்ள இயல்பு

அவர் பெரிய கூட்டத்தைத் தன் பக்கமாக இழுத்தார்

இயேசுவின் வார்த்தையைக் கேட்கவும் அவரால் சுகமடையவும் பெருந்திரளான மக்கள் கூடினார்கள். லூக்கா 5:15 பார்க்கவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

### சிலரின் கருத்துக்கள்

இயேசுவைப் பற்றி பல்வேறு கருத்துக்களை அறிய மத்தேயு 16:13-16 வாசியுங்கள். 16ம் வசனத்தை எழுதவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

மற்ற மக்களின் நோக்கத்தை அறிய கீழ்க்கண்ட குறிப்புகளைப் பார்க்கவும்.[2]

சரித்திரக் குறிப்பு : பூமியில் கிறிஸ்துவின் வாழ்க்கை ரோம பேரரசர் அகஸ்டஸ் சீசர் காலத்தில் (கி.மு. 27 - கி.பி. 14ல்) தொடங்கியது.

[1] யோவான். 7:12
[2] எதிர்மறையான எண்ணங்கள் (யோவான். 7:12); தியானம் (மத்தேயு. 26:7); ஆராதனை (மத்தேயு. 14:33)

# இயேசு தன்னைக் குறித்து சொன்னது



மயில்களைப் போல் கர்வம் கொண்டவர்கள்

சிலர் மயில்களைப் போல் தங்கள் சொந்த மேன்மையைப் பெருமையாக விவரித்துக் கொண்டு இருப்பார்கள். தாங்கள் யார்? என்பதையும் தங்களால் எல்லாவற்றையும் சாதிக்க முடியும்? என்பதையும் பெருமையாகப் பேசுவார்கள். தாங்களே முக்கியமானவர்களாயிருக்க வேண்டும் என்றும் விரும்புவார்கள். அவர்கள் எப்படிப் பட்டவர்கள் என அறிந்த பின்னர் அவர்களைக் கண்டு கொள்ளாமல் விட்டு விடுவோம். ஆனால் இயேசுவைப் போன்ற உயர்ந்த பண்புகள் கொண்ட ஒருவர் பேசும்போது மிக கவனத்துடன் அதனை எடுத்துக் கொள்ள வேண்டும். தாழ்மையும் சுயநலமுமற்ற இயேசுவை போன்ற ஒருவர் தன்னைக்குறித்து மேன்மையாக எப்படிப் பேச முடியும்? அவைகள் உண்மையாயிருந்தால் ஒழிய பேச முடியாது. இந்த மனிதர்கள் இயேசுவைப் பற்றி என்ன சொன்னார்கள் என்பதைப் பார்த்தோம். இனி இயேசு கிறிஸ்து தன்னைப் பற்றி என்ன சொன்னார் என்பதைப் பார்ப்போம்.

## இயேசுவின் அறிக்கைகள்



ஒன்று இயேசு உண்மையைச் சொல்கிறார் அல்லது உளறுகிறார்

இயேசு கிறிஸ்து பேசினதைப் போல முன்பு இருந்த மத தலைவர்களோ அல்லது தீர்க்கதரிசிகளோ தங்களைப் பற்றி பேசவில்லை. அவர்கள் மனிதரை கடவுளுக்கு நேராக வழி நடத்தினார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவோ மக்களைத் தம்மை நோக்கி வரச் செய்தார். கடவுளிடம் செல்வதற்கு தாமே வழியென்றும், மேலும் மனிதனின் அத்தியாவசிய தேவைகளுக்குத் தாமே தீர்வு என்றும் அவர் தன்னைப்பற்றி பிரகடனப் படுத்தினார். சிலர் அவரது பேச்சை தூஷணமாகவும் கடவுளை அவமதிக்கிறதாகவும் கண்டதில் வியப்பேதுமில்லை. அவர் மேல் நம்பிக்கை வைப்பதற்கோ அல்லது அவரைக் குற்றப்படுத்தவோ கட்டாயப்படுத்தப் பட்டார்கள்.

இயேசுவே ஜீவ அப்பம், உலகிற்கு ஒளி, இரட்சிப்பின் வாசல்[3] தேவனிடத்தில் சேர்வதற்கான வழி அவரே. யோவான். 14:6ஐ பார்க்கவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

## உலகம் உண்டாவதற்கு முன்பே தாம் இருந்ததை இயேசு அறிக்கையிட்டார்

காலம் தொடங்குமுன்

உலகம் உண்டாவதற்கு முன்னே தாம் பிதாவோடு இருந்த காலத்தைக் குறித்து இயேசு பேசினார். யோவான் 17:5ஐ பார்க்கவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

அவர் ஆபிரகாமுக்கு முன்பே தாம் இருந்ததைக் குறிப்பிட்டார். மனிதனாக நாம் எப்படி அவருக்குப்பின் வாழ்கிறோமோ அப்படியே ஆபிரகாம் இயேசுவுக்கு முன் வாழ்ந்தவராயிருந்தார்.[4]

## தாம் தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டார்

சர்வ வல்ல தேவனுடைய குமாரன்

இறுதியாக இயேசு கிறிஸ்து பிதாவைத் தன் தந்தையாக அழைப்பதினால் தாம் தேவனுடைய குமாரன் என்ற ஒரு சிறப்பான உரிமை கொண்டாடினார். இது தேவனோடு சமமாக இருப்பதை அறிக்கையிடுதலாகும். யோவான். 5:18ஐ பார்க்கவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

[3] யோவான். 6:35; 8:12; 10:9

[4] யோவான். 8:56-58

# இயேசுவின் அற்புதங்கள் வெளிப்படுத்துபவை

நம்மைச் சுற்றிலும் எங்கும் அடையாளங்கள் இருக்கின்றன: அவை எல்லாமே ஏதோ ஒரு வகையான அர்த்தத்தைக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, ஆட்கள் சாலையில் வேலை செய்கிறார்கள் என்பதற்காக 'வாகன ஓட்டுனர்கள் கவனித்து ஓட்டவும்' என்கிற அறிவிப்பு அடையாள பலகையை சாலையில் காணலாம். இயேசு செய்த அற்புதங்களும் கூட அடையாளங்களாக ஒரு அர்த்தத்தைக் கொண்டிருந்தன. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய சுவிசேஷங்களில் இயேசு கிறிஸ்து செய்த அநேக அற்புத அடையாளங்கள் எழுதப்பட்டுள்ளன. அதில் பல அற்புதங்கள் மனதுருக்கமானவை. அவர் வியாதியாய் இருந்தவர்களைச் சுகப்படுத்தினார்: சப்பாணியை நடக்கச் செய்தார்; பார்வையற்றோரை பார்வையடையச் செய்தார்;[5] அதோடு மட்டுமல்ல இறந்தவரையும் உயிரோடு எழுப்பினார்.



அடையாளங்களுக்கு அர்த்தம் இருந்தது

மேலும் இயேசு கிறிஸ்து இயற்கையை தமது வல்லமையால் மேற்கொள்ளும் அற்புதங்களையும் செய்தார். அவர் கடலின் மீது நடந்தார். புயல் காற்றை அடக்கினார்; கிடைத்த சிறிய உணவை பசியோடிருந்த ஆயிரமாயிரம் மக்கள் சாப்பிடுவதற்கு ஏதுவாக பெருகிடச் செய்தார். ஒரு சமயம் வெறும் தண்ணீரைத் திராட்சைரசமாக மாற்றினார்.

### இயேசு கிறிஸ்து செய்த அடையாளங்களின் பொருள் விளக்கம்

இயேசு கிறிஸ்துவின் அற்புதச் செயல்கள் யாவும் அவர் தன்னைக் குறித்துச் சொன்னவைகளையே உறுதிப்படுத்துகின்றன.[6] அற்புதங்கள் ஒப்பற்ற விதத்தில் அவர் உண்மையாகவே கடவுளுடைய குமாரன் என்பதைக் காட்டும்படியான அடையாளங்களாக இருந்தன. யோவான். 20:30-31ஐ பார்க்கவும்.

இயேசுவின் அடையாளங்கள்

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

### இயேசு அடையாளங்களைக் கொடுத்த காரணம்

எந்த ஒரு மனிதனும் நம்புவதற்கு ஒரு அடையாளம் தேவையில்லை.[7] அவர்கள் தங்களின் அவநம்பிக்கைக்கு எந்த ஒரு சாக்குபோக்கும் சொல்ல முடியாதபடி இயேசு கிறிஸ்து அற்புதங்களைச் செய்தார். யோவான். 15:22-24. வசனம் 24ஐ எழுதவும்.

இப்பொழுது சாக்குச் சொல்ல முடியாது

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

நாமும் சாக்குப்போக்குச் சொல்லாதபடி, நம் நிமித்தமாகவே அற்புதங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவருடைய அற்புதங்கள் யாவும் நம்முடைய நன்மைக்காகவே எழுதிவைக்கப்பட்டுள்ளன. எனவே நாமும் கூட போக்குச் சொல்ல முடியாது.

# உங்களது சொந்த கருத்தை உருவாக்குதல்



சாட்சியைச் சீர்தூக்கிப் பார்த்தல்

உண்மையைக் கண்டறிவதற்குச் சாட்சிகளைக் கவனமாக ஆராய்ந்து பார்த்தல் நீதிமன்றங்களின் தலையாய கடமை. அவ்விதமாகவே புதிய ஏற்பாட்டு நூலாசிரியர்கள் இயேசுவை குறித்து கூறப்படும் உண்மைகளையும் கவனமாக நாம் கணிக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். அதுதான் இந்த பாடத்தின் நோக்கமாகும். இயேசுவின் சீடர்களாகிய அப்போஸ்தலர்கள் அவருக்கு சாட்சிகளாக நம்முன் நிற்கின்றார்கள். நீதிமன்றத்தில் சாட்சிகளைக் கேட்டு தீர்ப்பளிக்கவேண்டிய பொறுப்பில் உள்ளவர் போன்று நீ இருக்கிறாய். இயேசுவின் சீடர்கள் (அப்போஸ்தலர்) சாட்சிகளாக இருக்கின்றனர். அப்போஸ்தலர் 2:32ஐ வாசிக்கவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

[5] மத்தேயு. 15:30-31

[6] யோவான். 10:25; அப்போஸ்தலர். 2:22

[7] மத்தேயு. 12:38,39; யோவான். 20:29

சீர்தூக்கிப் பார்க்க இன்னும் தேவையானவை

## மற்றொரு சான்று; இயேசு பாவத்தை மன்னித்தார்

இயேசு தன்னைக் குறித்துக் கூறினவைகளையும் அவர் செய்த அற்புதங்களையும் உட்பொருளின் முக்கியத்துவத்தையும் பார்க்கிறீர்கள். மேலும் நீங்கள் இயேசு பாவங்களை மன்னிக்கும் தன்மையை காணலாம். ஒரு தீர்க்கதரிசியோ அல்லது ஒரு மதத்தலைவரோ பாவங்களை மன்னிக்கவில்லை. கடவுள் மட்டுமே பாவத்தை மன்னிக்கிறார். இயேசு ஒரு மனிதனின் பாவங்களை மன்னித்ததின் மூலம் அநேக மனிதரை கோபமடையச் செய்தார். இதுவே அவர் கடவுள் என்பதற்கு ஆதாரம். லூக்கா. 5:18-21ஐ வாசிக்கவும். 20, 21 வசனங்களை எழுதவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

இருதயத்தை ஆராய்தல்

ஒருவனோ அல்லது ஒருத்தியோ உண்மையாகவே பாவத்திற்காக மனஸ்தாபப்படும்போது இயேசு அவர்களுடைய இருதயத்தின் ஆழத்தை அறிவார்.[8]

## மேலும் ஒரு சான்று: கன்னிப் பிறப்பு

இயேசுவைப் பற்றி ஒரு சரியான கணிப்புக்கு வர வேண்டுமானால் அவருடைய பிறப்பைப் பற்றிப் புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். எந்த ஒரு மனிதனிடமும் தொடர்பு கொண்டிராத ஒரு கன்னியிடம் அவர் பிறந்ததாக அவர்கள் வெளிப்படையாக கூறுகிறார்கள். தேவனுடைய ஆவி கிறிஸ்துவின் கருக்கொள்ளுதலைப் பிறப்பித்தது. லூக்கா. 1:26-35. 35ம் வசனத்தை எழுதவும்.



... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

சர்வ வல்ல தேவனால் கூடாதது ஒன்று உண்டா?

இந்தக் காரணமும் அவரை மற்ற மனிதரிடமிருந்து தனித்தன்மை வாய்ந்தவராக வேறு படுத்துகிறது. அவர் மனிதன் மட்டுமல்ல அவர் கடவுளாக இருக்கிறார்.[9]

# இறுதியாக

உங்களுடைய முடிவான கருத்து என்ன? இயேசு ஒரு தனித்தன்மை வாய்ந்தவராக இந்தப் பூமியில் தன் வாழ்க்கையை ஆரம்பித்தார், அதே தனித்தன்மையோடு இந்த உலகத்தை விட்டுச் சென்றார். அவருடைய மரணம் முடிவானது அல்ல. அவர் உயிரோடு திரும்ப வருவார், மீண்டும் அவர் மரணத்தை சந்திக்க மாட்டார்.

இயேசுவின் உயிர்த்தெழுதல் ஒரு சரித்திர சம்பவம். ஆகவே அதைக் குறித்து முழுமையாக பின்பு கற்போம்.

சரித்திரக் குறிப்பு : இயேசு சிலுவையில் துன்புறுத்தப்பட்டு மரிக்கும்போது 33 வயதாக இருந்தார். ஆனால் அது முடிவல்ல.

யார் இந்த இயேசு கிறிஸ்து? அவர் வாழ்ந்த காலத்தில் மக்களிடத்தில் மிகவும் அதிசயமான அனுமானத்தை தோற்றுவித்திருந்தார். நீங்கள் விரும்புவது போல் அவர்களும் அவரைப் பற்றிய உண்மையை அறிய விரும்பினார்கள். ஆனால் அவ்வாறு அறிந்தபோதும் அவர்கள் அதே மனிதரைப் பற்றி வித்தியாசமான முடிவுகளுக்கு வந்தார்கள்.

ஆனால் ஒரே நபரைப்பார்த்து வேறுபட்ட இறுதித் தீர்மானத்திற்கு வந்தார்கள்.

சாட்சிகளைக் கேட்டு முடிவெடுக்கும் குழுவில் ஒருவராக நீங்களும் உங்களுடைய நியாயக் கூற்றைச் சொல்ல எதிர்பார்க்கப் படுகிறீர்கள். நீங்களும் அவருடைய சீடன் தோமாவைப் போல அவர் உங்களுடைய கர்த்தரும் ஆண்டவருமாயிருக்கிறார்[10] என்று கூறுவீர்களா?

---

8 மற்றொரு சம்பவம் லூக்கா. 7:36-50

9 மத்தேயு. 1:23 (கடவுள் நம்மோடு இருக்கிறார்)

10 யோவான். 20:28